Scanned by CamScanner

வட்டநிலா

-பாவலர். இரா. சுப்பிரமணியன்

வட்டநிலா வானில் மிதக்குது - அது
பொட்டைப் போல பார்க்க சொலிக்குது.
எட்டாத இடத்தில் இருக்குது - இதை
எட்டிப் பிடிக்க உலகம் பறக்குது.
தட்டில் இருக்கும் பாலைப் போலது - வானில்
தவழ்ந்து எங்கும் ஒளியை வீசுது.
குட்டிபாப்பா கூவி அழைக்குது - அதை
கட்டிப் பிடிக்கத் தாவிக் குதிக்குது.
கற்பனைக்கு வற்றா ஊற்றது - கவிதை
பிறப்பதற்கு ஏற்றக் கருவது.

பாம்புகளின் காதல்!

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால், இருபாம்புகள் காதல் வசப்பட்டு விளையாடியதை பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பார்த்தனர். திருச்செங்கோடுக்கு அருகில் சாணார்பாளையத்தில் மாலை 5 மணிக்கு புற்கள் முளைத்துள்ள வயலில் 6 அடி உயரமுள்ள நாகப்பாம்பும், சுமார் $5^{1}/_{2}$ அடி உயரமுள்ள சாரைப் பாம்பும் பின்னி பிணைந்து விளையாடின. இரண்டும் கயிறு போல முறுக்கிக் கொண்டு வயலில் எழுந்து நின்றன.

நாகப்பாம்பு பழுப்பு கலந்த வெள்ளை நிறத்திலும், சாரைப் பாம்பு மேல்புறம் கரும்பழுப்பும், அடிப்பக்கம் மஞ்சள் நிறமாகவும் இருந்தது. நாகங்கள் காதல் செய்வதைக் கண்ட பாலு என்பவர் வேகமாக வந்து காமிராவின்மூலம் இந்த அபூர்வ காட்சியை படமாக்கினார்.

பொதுமக்கள் இக்காட்சியை திரண்டு நின்று பார்த்தனர். சுமார் ஒரு மணி நேரம் விளையாடிய பிறகு பாம்புகள் ஊர்ந்து சென்று மறைந்தன.

ஆப்பிரிக்க நெருப்புக்கோழி!

ஆப்பிரிக்க நெருப்புக் கோழி தற்கால பறவைகளை விட மிகப் பெரியது. இது 2 மீட்டர் 75 கி.கி. வரை எடை கொண்டது. இது, ஆப்பிரிக்க திறந்த சமவெளிகளில் வாழ் கின்றது. தாவர விதைகள் பூச்சிகள், பல்லிகள் முதலிய உணவு பொருட்களும் அங்கே கிடைக்கின்றன. பாலைநிலவாசி



பான நெருப்புக்கோழி நீரின்றி சமாளிக்க வல்லது.

நெருப்புக் கோழி பறப்ப தில்லை. மிக நன்றாக ஓடும். ஒரு குதிரையை ஓடி முந்திவிட வும், எதிர்ப்படும் தடங்கல்களை கடக்கவும் அவற்றால் முடியும். உணவையும், நீரையும் தேடிக் கொண்டு நெருப்புக் கோழிகள் சில வேளைகளில் நெடுந் தொலைவு செல்ல நேரிடுகிறது. எதிரிகளிடம் இருந்து அவை ஓட்டத்தின் மூலமே தப்பும்.

இவற்றின் கால்கள் இம்மாதிரி இயக்கத்திற்கேற்ற தகவமைப்பை பெற்றுள்ளன. அவை

நீண்டவை. வலிய தசைகள் அமைந்தவை. காயம்படாம லும், கொதிக்கும் பாலை மணலில் அழுன்று போகாமல் இருக்கவும் விரல்களை அடித் தோல் காக்கிறது. ஒரே உதை யால் நெருப்புக் கோழி மனி தனை கொன்றுவிட முடியும்.

நெருப்புக் கோழியின் சிறகு மென்மையுள்ள இறகுகள் உள்ளன. வாலிலும் இத்தகைய இறகுகளே உள்ளன.

நெருப்புக் கோழியின் கால் கள் வலிமை பெற்றிருப்பதற்கு காரணம் எத்தனையோ தலை முறைகளாக ஓட்டத்தின்போது நிகழ்ந்த இடைவிடாத் பயிற் சியே ஆகும். நீடித்த காலப் போக்கில் இதன் கால்கள் எந்த அளவுக்கு நீண்டனவோ அந்த அளவு கழுத்தும் நீண்டது. குட்டை கழுத்தும், நீண்ட கால்களும் கொண்டிருந்தால், தரையில் இருந்து உணவை கொத்துவது இதற்கு இயன்றி ராது. நெடிய கழுத்தின் மேல் உள்ள தலையை நிமிர்த்தி, நெருப்புக் கோழி திறந்த சம வெளியில் எதிரிகளை தொலை வில் இருந்தே பார்த்துவிடும்.

இனப்பெருக்க காலத்தில் பெண் நெருப்புக் கோழி உறுதி யான ஓடுகளை உடைய பருத்த முட்டைகள் இடும். இவை கோழி முட்டைகளைவிட 20 மடங்கு பெரியவை. இவற்றை பள்ளத்தை தோண்டி அப் போது வெளியே எடுக்கப் பட்ட கற்களை பள்ளத்தை



சுற்றிலும் இடுகிறது. முட்டை களை பகலில் பெண்ணும், இரவில் ஆணுமாய் தாய்-தந்தை கோழிகள் இரண்டும் அடைகாக்கின்றன. அவற்றின் வண்ண அமைப்பு இந்த செய லுடன் தொடர்பு கொண்டது. பெண் பறவைகள் பழுப்பு சாம்பல் நிறம் உள்ளவை. பக லில் கூட்டின் மேல் உட்கார்ந் திருக்கையில் அவை எளிதில் கண்ணிற்கு புலப்படமாட்டா.

இவற்றின் இறகுகள் அழகு பொருட்களாக பயன்படுகின் றன. இறகுகளுக்காக நெருப்புக் கோழிகள் வேட்டையாடவும், தனிப்பட்ட பண்ணைகளில் வளர்க்கவும் பயன்படுகின்றன. இவற்றின் முட்டைகளும், இறைச்சியும் உணவாக பயன் படுகின்றன.

Scanned by CamScanner

வெறிப்புலி!

பசியுடன் இருந்த புலியை படம்பிடித்த புகைப்படக்காரரை அந்த புலியே அடித்து கொன்றுவிட்டது. ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான அங்கோலாவில் 18 ஆண்டுகள் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. மக்களுக்கு சரியான அளவு உணவு கிடைக்காமல் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் அங்குள்ள மிருககாட்சி சாலைகளில் உள்ள மிருகங்களுக்கு உணவு போடாததால் பசியால் வாடுகின்றன.

இந்த நிலையில் அங்குள்ள லுவாண்டா மிருககாட்சி சாலையில் உள்ள மிருகங்களை தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர். அந்த மிருகங்களை விமானத்தில் ஏற்றிச்செல்லும் காட்சியை தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த தொலைக்காட்சி படப்பிடிப்பாளர் ரிக்லொம்பா என்பவர் படமாக்கிக் கொண்டிருந்தார். அப்போது பசியுடனும், கோபத்துடனும் இருந்த ஒரு புலி, கூண்டை உடைத்துக் கொண்டு பாய்ந்து அவரை கடித்து குதறியது. இதில் படப்பிடிப்பாளர் அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் செத்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்த இந்தக் காட்சியை கண்டு திகைத்து நின்ற பாதுகாவலர்கள் அந்தப் புலியை சுட்டுக்கொன்றனர்.

துப்பாக்கி குண்டு விலை உயர்வு!

அரிசி, எண்ணை விலை உயர்ந்து வருவது போல் சர்வதேச சந்தையில் நாளுக்கு நாள் துப்பாக்கிக் குண்டுகளின் விலையும் உயர்ந்து வருகிறது. உலகெங்கும் உள்ள பல தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தானில் இருந்து மறைமுகமாக ஆயுத சப்ளை செய்யப்படுகிறது. அங்குதான் துப்பாக்கிகள், ஆயுதங்கள், குண்டுகள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக ஆயுத வர்க்கம் எல்லைப் பகுதிகளில் அதிகமாக நடந்து வருகிறது. துப்பாக்கிக் குண்டுகளை தீவிரவாதிகள் மட்டுமின்றி பாகிஸ்தானியர்களும் அதிகமாக வாங்குகின்றனர். திருமணம் போன்ற விழாக்களில் மகிழ்ச்சியை தெரிவிக்க வாண வேடிக்கையாக பயன்படுத்துகின்றனர். இதனால் துப்பாக்கிக் குண்டுகளின் விலை அதிகரித்து இருக்கிறது. கைத் துப்பாக்கிகளில் போடக்கூடிய குண்டுகள் 80 சதவீதமும், ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளுக்கான குண்டுகள் விலை 250 சதவீதமும் உயர்ந்திருக்கிறது.

ராணி காமிக்ஸ்-235
(மாதம் இருமுறை இதழ்)
ஏப்ரல் 1-15
1994

முரட்டுக்காளை
கார்த்
தோன்றும்

அடிமைப் பெண்

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

கார்த்! நம்மைப் பிடிக்கவா?
இல்லை! இந்த இடத்தை கடக்கும் வரைதான் ஆபத்து. அதன்பிறகு ஒன்றுமில்லை!
இல்லை லீமா! நாம் திரும்பி வேறு பாதையில் செல்வது நல்லது!
உடனே கார்த் வேனை திருப்பினார்.
வேண்டாம் கார்த்! வேண்டாம்!
நாம் இப்போது எந்தப் பாதையில் செல்வது?

மலைப்பாதை வழியாக வான்டாகாவுக்குச் செல்லலாம். ஆனால் வேன் செல்வதற்கு ஏதுவாக பாதை இருக்காது!
அதைத்தவிர வேறு வழியில்லை!
அதுதான் நல்லது! பாதையைப் பற்றி கவலை இல்லை!
வேன் கரடுமுரடான மலைப் பாதையில் சென்றது.
நம்முடைய மற்ற வண்டிகளை பின்னால் காணவில்லையே!
பிலீப்! அவைகள் சேரவேண்டிய இடத்துக்கு போய்ச் சேர்ந்துவிடும்!
மற்ற வேன்கள் வேறு பாதையில் சென்ற
தாக்குதலில் இருந்து தப்பிக்கவே இந்த ஏற்பாடு!
லீமா! பாதை படுபயங்கர மாக இருக்கிறது. கரணம் தப்பினால் மரணம்தான்!
செங்குத்தான மலைப்பாதையில் வேன் சென்றுகொண்டிருந்தது.

மலைப்பாதை ஓர் இடத்தில் முடிவடைவது போலத் தெரிந்தது.
கார்த்! பாதை முடிந்துவிட்டதா? ஒன்றுமே தெரிய வில்லையே?
மா! வேனை நீ ஓட்டிவா! நான் முன்னே பாதையை சரிபார்த்துச் செல்கிறேன்!
உடனே கார்த் கீழே இறங்கி முன்னே நடந்து சென்றார்.
வா லீமா! வேன் தாராளமாக போகலாம்!
எதிரில் ஏதோ வண்டி வருவதுபோல சத்தம் கேட்கிறதே!
எதிரில் ஒரு மாட்டு மந்தை பயங்கர வேகத்தில் வந்துகொண்டிருந்தன.
ஆ...! எருமை மாட்டுக் கூட்டம் அல்லவா வருகிறது!

எருமை மாடுகள் கார்த்தை நோக்கி பாய்ந்து வந்தன.
என் அருகில் வந்துவிட்டதே! என்ன செய்வது?
மாடுகள் கார்த்தை முட்டித் தள்ளியது.
ஒன்று என்றால் சமாளித்துவிடலாம்! கூட்டத்தை எப்படி சமாளிப்பது?
மாடுகள் ஒட்டுமொத்தமாக தாக்கியதால் கார்த் சமாளிக்க முடியாமல் திணறிப்போய் கால் தடுமாறி பள்ளத்துக்குள் விழுந்தார்.
நல்லவேளையாக அருகில் இருந்த ஒரு பெரிய கல்லை பிடித்துத் தொங்கினார்!
ஆ...ஆ...ஆ...!
நல்ல வேளை பிடிக்க பிடி கிடைத்தது இல்லாவிட்டால் பாதாளத்துக்குள் சென்றிருக்க வேண்டியதுதான்

போ...!
சீ...போ...!
கார்த் பிடியை இறுக்கிப் பிடித்து கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறினார்.
அதற்குள் லீமா வேனில் இருந்து இறங்கி துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கிச் சுட்டாள்.
டுமீல்...! டுமீல்...!
கார்த்! காயம் எதுவுமில்லையே?
துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் மாட்டுமந்தை மிரண்டு ஓடியது.
நன்றி லீமா! நீ உதவவில்லை என்றால் மாடுகள் என்னை முட்டி கீழே தள்ளியிருக்கும்!
கார்த்! நீங்கள் வேனை செலுத்துங்கள்! நான் முன்னே நடந்து வருகிறேன்!
வேண்டாம் லீமா! நானே நடந்து வருகிறேன்!
பிலீப் சொன்னது போல பாதை மிகவும் மோசமாகத்தான் இருக்கின்றது!

லீமா வேனை ஓட்டிவந்தாள்.
இன்னும் அங்கே ஜெனரல் கனூன் என்னென்ன கூத்து பண்ணப் போகிறானோ தெரியவில்லை!
லீமா! இனி உன் துப்பாக்கிக்கு வேலை இருக்காது! சுட எங்கே கற்றுக் கொண்டாய்?
பள்ளத்தாக்குகளில் நிறைய கொள்ளை நடக்கும்! அதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள கற்றுக்கொண்டது!
கார்த் வேனில் ஏறிக்கொண்டார்.
அதோ அதுதான் அந்தக் கிராமம்!
பிலீப்! லான்டாகா கிராமத்திற்கு இன்னும் எவ்வளவு தூரம் செல்லவேண்டும்!
இன்னும் சிறிது தூரம்தான்!

கிராமத்துக்குள் நுழைந்ததும் ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.
ஒரு கம்பத்தில் ஒருவனை கட்டிவைத்து சராமாரியாக கத்தியை பாய்ச்சி யிருந்தார்கள்.
வேனை நிறுத்து! அங்கே பார்த்தாயா?
என்ன அக்கிரமம்! பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறதே! இது யாருடைய வேலை!
ஜெனரல் கானுடைய வேலைதான். எங்களை மிரட்ட ஒருவனை பலிவாங்கிவிட்டான்!
வேனில் இருந்து பொருட்கள் இறக்கி வைக்கப்பட்டன.
கார்த்! நாங்கள் ஒரு படையை உருவாக்கி இருக்கிறோம்!
கனூனை எதிர்த்துப் போராடவா?

திடீரென்று அவர்கள் கிராமத்துக்குள் புகுந்து இளைஞர்களை சுரங்கத்துக்கு இழுத்து செல்வதை தடுக்க முயன்றுகொண்டு இருக்கிறோம்!
நான் அந்த கனூனை பார்க்க வேண்டுமே?
என்னுடன் வாருங்கள்! அவன் இருப்பிடத்தை காட்டுகிறேன்!
கார்த்தை அழைத்துச் சென்று கனூன் இருப்பிடத்தைக் காட்டினார்கள்.
அதோ அங்கே கோட்டையில் ஒரு பட்டம் பறக்கிறதே. அங்குதான் கனூன் இருக்கிறான்!
பழங்காலத்து ஸ்பெயின் கோட்டை போலிருக்கிறது!
அரக்கன்! அங்கிருந்துகொண்டுதான் எளியவர்களை வாட்டிவதைத்துக் கொண்டிருக்கிறான்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

அவர்கள் இருவரையும் கொல்லப் போகிறாயே இது உன் சொந்த காரணத்திற்காகவா?
என் அப்பாவின் ஆசை!
வெள்ளையர்களை கண்டால் கண்டந்துண்டமாக வெட்டிப் போட வேண்டும்! இதுதான் என் குறிக்கோள்!
கனூன்! நாம் இருவரும் பங்காளிகள்!
இல்லை! இங்கே நான்தான் ஜெனரல்! என் கட்டளைக்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்!
கனூன் கட்டளையை பிறப்பித்துவிட்டு விருட்டென்று சென்றுவிட்டான்.
இவனுக்காக நாம் எவ்வளவு பணத்தை கொட்டி ஆயுதங்கள் ஏற்பாடு செய்கிறோம்!
தாமூரா! இங்கு கனூன் கட்டளையை நிறைவேற்றுவதை தவிர வேறு வழியில்லை!

சரி! இன்று இரவே போய் கார்த்தையும் அந்தப் பெண்ணையும் இழுத்து வாருங்கள்!
இரவு அந்தக் கிராமம் பயங்கர அமைதியுடன் இருந்தது. அப்போது ஒருவன் லீமாவின் குடிசைக்கு காவலுக்கு இருந்தவனை மடக்கினான்.
கார்த் குடிசையில் படுத்து இருந்தார்.
ஏதோ சத்தம் கேட்டது போல் இருந்ததே?
லீமா இருக்கிறாளா என்று பார்த்து வருவோம்!
கார்த் எழுந்து லீமாவின் குடிசையை நோக்கி வந்தார்.
காவலுக்கு இருந்தவனை எங்கே காண வில்லை!
அப்போது— ஐந்தாறு பேர் சட்டென்று கார்த்தை முற்றுகையிட்டார்கள்.

Scanned by CamScanner

ஜெனரல் கனூன் உன்னை அழைத்துவரச் சொன்னார்!
ஜெனரல்! இதோ இவள்தான் அந்த வெள்ளைக்காரப் பெண்!
என்னை ஏன் இங்கே தூக்கிவரச் சொன்னாய்?
உள்ளே கனூன் இருந்தான்.
வாயை மூடு! இப்போது நீ என் அடிமை!
என் அப்பாவின் சாவுக்கு காரணமான அமெரிக்கர்களை கண்டாலே எனக்கு பிடிக்காது!
உடனே லீமா அவனை ஓங்கி அறைந்தாள்.
பளார்...!
முட்டாள்! யாரோ உன் அப்பாவை கொன்றதற்கு பழியை அமெரிக்கர்கள் மீது திசை திருப்பப் பார்க்கிறாயா?
ஏய்... அடிமை நாயே! என்னை அடித்துவிட்டாய் உன்னை சும்மா விட மாட்டேன்! டேய் இவளை இழுத்துச் செல்லுங்கடா!

கனூனின் கோட்டை ஒரு மலைக் குன்றின் மேல் இருந்தது. கார்த், பிலீப், தாதா மூவரும் லீமாவை தேடி அங்கே வந்தார்கள்.
பிலீப்! முன்பக்கமாக சென்றால் பாதுகாப்பு பலமாக இருக்கும்!
அதனால் பின்பக்க வழியாக செல்வோம்!
கார்த்! எங்களால் இதில் ஏறமுடியாது! நாங்கள் இங்கேயே நிற்கிறோம்!
பிலீப்! நீங்கள் சுரங்கத்துக்குச் செல்லுங்கள் இங்கே நின்றால் யாராவது பார்த்துவிடக்கூடும்!
மலை செங்குத்தாக இருக்கிறது! ஏறிவிடுவாயா பிலீப்?
உடனே கார்த் கோட்டையை நோக்கி ஏறினார்.
காற்று வேறு பலமாக அடிக்கிறது! ஏறுவதற்கு பிடிப்பும் இல்லை!

கோட்டையில்- வீமாவை கட்டி வைத்து கசை அடி கொடுக்க தயாரானார்கள்.
கனூன்! என்னை அடித்து நொறுக்கினாலும் உன் எண்ணம் நிறைவேறாது!
உலகம் முழுக்க என் புகழ் பரவத்தான் போகிறது! அதை நீ பார்க்கத்தான் போகிறாய்!
அதேநேரம்- தாத்தாவும் பிலிப்பும் சுரங்கத்தை நோக்கி விரைந்தார்கள்.
இருவரும் சுரங்கத்துக்கு வந்தார்கள்
நாம் சுரங்கத்துக்குச் சென்று அங்கு அடிமையாக இருக்கும் நம் ஆட்களை விடுவிப்போம்!
காவலாளிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! காரியம் சுலபமாக முடிந்துவிடும்!
தாதா! நீ சுரங்கத்தில் நம் ஆட்களை அடைத்து வைத்திருக்கும் இடத்துக்குச் செல். நான் ஸ்டோர் அறைக்குச் சென்று வெடி வைக்கிறேன்!
இருவரும் ஆளுக்கொரு பக்கமாக சென்றார்கள்.
உம்... சீக்கிரம் போ!

தாதா நேராக அடிமைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு வந்தான்.
தாதா! நீ எப்படி இங்கே வந்தாய்?
நான் உங்களை மீட்டுச் செல்ல வந்திருக்கிறேன்.
பிலிப் ஸ்டோர் அறைக்கு வந்து அங்கிருந்த காவலாளியை தாக்கினான்.
இந்தா வாங்கிக் கொள்!
உடனே பிலிப் வெளியே வந்து வெடிகுண்டை கையில் எடுத்தான்
காவலாளிகள் தங்கி இருந்த அறையை இருட்டாக்கிவிட்டேன்!
டேய் எழுந்திரியுங்கள்: அடிமை நாய்கள் தப்பிச் செல்கிறார்கள்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

கனூன்! கார்த்தை அழிக்க உன்னால் முடியாது! என் பேச்சைக் கேளு!
வீமா! தயாராக இரு! அவர்கள் பேசி முடிப்பதற்கு நாம் தப்பிவிடலாம்!
கோபுரத்துக்கு செல்லும் வாசல் கதவு அருகில் இருக்கிறது அங்கே ஓடிச் செல்!
பேச்சுவார்த்தை முற்றி கனூன் வாளால் தாமுராவைத் தாக்கினான்.
முட்டாள்! இங்கே என் பேச்சை யாரும் மீறக் கூடாது. புரிந்ததா?
டமார்!
அய்யோ... அவர்கள் தப்பி ஓடுகிறார்கள்!
கார்த்தும் வீமாவும் கோபுர வாசலுக்குள் நுழைந்தார்கள்
டுமீல்...!
டுமீல்...
துப்பாக்கி குண்டுகள் சரமாரியாக வந்தன.
இருவரும் உள்ளே வந்ததும், கார்த் வாசல் கதவை மூடினார்.
வீமா! நான் கதவை மூடிவிட்டு வருகிறேன். நீ மேலே போ!

கனூன் ஆட்கள் எப்படியும் கதவை உடைத்துக் கொண்டு மேலே வந்து விடுவார்கள்!
இந்த இராட்சத பட்டத்தை வைத்து தப்பித்து விடலாமா?
கார்த்! நாம் கோபுரத்தின் உச்சிக்கு வந்து விட்டோம். காற்று வேறு பலமாக அடிக்கிறது!
இந்த பட்டம் நம் இருவருடைய எடையை தாங்கும்மல்லவா? நாம் இதிலே தொங்கிக் கொண்டு பறந்து விடலாம்!
எப்படிச் சொல்கிறீர்கள் கார்த்!
கார்த்! அவர்கள் கதவை நொறுக்கி விட்டார்கள்! மேலே வந்துவிடுவார்கள்!

லீமா
தாமதிக்காதே!
இதை விட்டால்
வேறு வழியில்லை!
கார்த் பட்டத்தை அவிழ்த்துவிட்
தயாராக நின்று கொண்டிருந்தார்
லீமா!
இறுக்கி
பிடித்து
கொள்!
லீமா தொற்றிக்கொண்டதும்
கார்த் பிடியை தளரவிட்டார்.
உடனே பட்டம் காற்றில் பறந்தது.
ஏய்! அங்கே
பாருங்கள். அவர்கள்
பட்டத்தில் தப்பிச்
செல்கிறார்கள்!
சுட்டுத்தள்ளுங்கள்!
கனூன் ஆட்கள் சரமாரியாக சுட்டுத்தள்ளினார்க
ஆனால் பட்டம்தான குண்டுக்கு எட்டாத தூரத்துக்கு வந்துவிட்ட
பட்டம் காற்றை கிழித்துக்கொண்டு சென்றது.

உடனே கனூன்; தாமுரா மற்றவர்கள் அனைவரும்
கோபுரத்துக்கு வந்தார்கள்.
தாமுரா! அவர்கள்
தப்பிச் செல்ல நீதான்
காரணம்!
ஜெனரல்...!
சூறாவளிக் காற்று
அடிக்கத் தொடங்கி
விட்டது!
பட்டம் இந்தக் காற்றை
தாக்குபிடிக்க முடியாது, எப்படியும்
கார்த்தும் அந்தப் பெண்ணும்
செத்துவிடுவார்கள்!
கார்த்! சூறாவளிச்
காற்று அடிக்கிறதே!
பட்டம் இந்தக்
காற்றுக்கு தாங்குமா
என்று தெரிய
வில்லையே!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

புதிய சிறுவர் தொடர்கதை!

அருண்

எழுதும்

சிறுவர்களுக்கான தொடர்கதை. இது மந்திர தந்திரம் நிறைந்த வீரக்கதை. படித்து மகிழுங்கள்!

1

முன்னொரு காலத்தில் நமது தென்னாட்டில் நீலமலை என்று ஒரு நாடு இருந்தது.

விந்திய மலை அடிவாரத்தில் நீலமலை இருந்ததால், வளம் நிறைந்ததாக இருந்தது. மலை வளத்தில் சிறந்து விளங்கியது. மலையில் இருந்து ஆறு ஒன்று புறப்பட்டு, நாட்டுக்குள் பாய்ந்து, நாட்டையே வளப்படுத்தியது. அது வற்றாத ஆறு. கோடை காலத்திலும் தண்ணீர் கரைபுரண்டு ஓடும்.

மலையில் அடர்ந்த காடுகள் இருந்தன. சந்தனம், அகில், தேக்கு போன்ற சிறந்த மரங்கள் வளர்ந்தன.

காட்டு மிருகங்களும் ஏராளமாக வசித்தன. யானைகளைக் கூட்டம் கூட்டமாகப் பார்க்கலாம். புலி உறுமும். சிங்கங்கள் சண்டையிடும். மலைப்பாம்புகள் நெளியும். அடர்ந்த காடு. அதன் உள்ளே யாருமே போனது இல்லை. அவ்வளவு பயங்கரமாக இருக்கும்.

மலை உச்சியில் சில குகைகள் இருந்தன. அந்தக் குகைகளில் சாமியார்கள், மந்திரவாதிகள் வாழுகிறார்கள் என்று பெரியவர்கள் சொல்லுவது உண்டு. பேய் பிசாசுகள், இராட்சதர்கள் காடுகளில் உலாவுகிறார்கள் என்றும் கூறுவார்கள். அவர்களைப் பற்றி பாட்டிகள் நிறையக் கதை கூறுவார்கள். "ஒரு அரக்கன் வந்து, ஒரு குழந்தையைப் பிடித்து, வாய்க்குள் போட்டு விழுங்கியதை என் கண்ணால் பார்த்திருக்கிறேன்" என்று சுப்புப் பாட்டி பிள்ளைகளிடம் கதை சொல்வது உண்டு!

ஆறு ஓடியதால், நீலமலை மிகவும் வளம் பொருந்திய நாடாக இருந்தது. நெல்லும் கரும்பும், மாவும் பலாவும் நிறைய விளைந்தன. பஞ்சம் என்றால் என்ன என்பதே நீலமலை மக்களுக்குத் தெரியாது. காடும் விளைந்தது; நாடும் விளைந்தது. மக்கள் கொஞ்சங்கூடக் கவலை இல்லாமல்

வாழ்ந்தார்கள்.

பசி இல்லாததால், அங்கே பொய் புரட்டு இல்லை. பட்டினி இல்லாததால், அங்கே திருட்டு தீங்கு இல்லை. எல்லாருக்கும் வேலை கிடைத்ததால், யாரும் யாரையும் ஏமாற்றுவது இல்லை. மக்கள் அன்பு நிறைந்தவர்களாக, பண்பில் சிறந்தவர்களாக விளங்கினார்கள்.

இதற்கு மன்னன் குமணனும் ஒரு காரணம். குமணன் செங்கோல் தவறாது அரசு நடத்தினான். தேனிக்கள் பூக்களில் தேன் எடுப்பது போல மக்களுக்குக் கொஞ்சங்கூட சிரமம் இல்லாதபடி வரிகள் வசூலித்தான். அந்த வரிகளை, மக்களுக்கே செலவு செய்தான். நாடு முழுக்கப் பள்ளிக்கூடங்கள் நடத்தினான். வழிப்போக்கர்களுக்கு அன்ன சத்திரங்கள் கட்டிவைத்தான். சாலைகளில் மரம் வளர்த்தான். மழை நீரைத் தேக்கிப் பயிர் செய்யக் குளங்கள் வெட்டினான். இலவச மருத்துவமனைகள் அமைத்தான். மக்களின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சி என்று கருதினான்.

மக்களும் மன்னனைத் தெய்வமாக மதித்து, கைகூப்பித் தொழுதார்கள். மன்னன் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். "மன்னன் வாழ்க!" என்று வாய் நிறைய வாழ்த்தினார்கள்.

மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் எழினி. பெயருக்கு ஏற்ப எழில் நிறைந்த அழகியாக அவள் விளங்கினாள். நீண்ட கருங்கூந்தல். முழுமதி போன்ற முகம். முகத்தில் எப்பொழுதும் சிரிப்பு தவழ்ந்து அழகுக்கு அழகு சேர்ந்தது.

மன்னனுக்கு எழினி மட்டுமே மகள். வேறு குழந்தை கிடையாது. ஆண் குழந்தை பிறக்கவே இல்லை. அதற்காக மன்னனோ, அரசியோ கவலைப்படவும் இல்லை. எழினியை ஆண் குழந்தை போல வளர்த்தார்கள். அவளும் அழகில் சிறந்தது போல்வே, வீரத்திலும் சிறந்து விளங்கினாள்.

யானை ஏற்றம், குதிரை ஏற்றம் பழகினாள். வாள்வீச்சு, வேல்வீச்சில் பயிற்சி பெற்றாள். மற்போர், சொற்போரிலும் சிறந்து விளங்கினாள். அவளை "வீரப்பெண்" என்று

நாட்டுமக்கள் கூறுவது வழக்கம்.

எழினி வீரத்தில் போலவே அன்பிலும் சிறந்து விளங்கினாள். மக்களிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தாள். அவர்களுடன் சேர்ந்து பழகினாள். அடிக்கடி தோழிகளுடன் வீதிவீதியாக வருவாள். மக்களின் குறைகளைக் கேட்டு, அந்த இடத்திலேயே தீர்த்துவைப்பாள். இதனால் அவளுக்கு மக்களிடம் நல்ல செல்வாக்கு இருந்தது.

ஒருநாள் காலை நேரம்.

மன்னன் குமணன் அரசவையில் இருந்தான்.

மன்னனுக்கு அருகில் அரியணை இடப்பட்டு, இளவரசி எழினி அமர்ந்திருந்தாள்.

அமைச்சர்கள், தளபதிகள், புலவர்கள் அவரவர்க்கு உரிய இடங்களில் அமர்ந்திருந்தார்கள்.

நாட்டுமக்களின் நலன்களை மன்னன் கேட்டு அறிந்துகொண்டிருந்தான்.

'திடீர்' என்று "மன்னா... மன்னா..." என்று கூவிக்கொண்டு ஒரு பெண் ஓடிவந்தாள்.

அவள் கூந்தல் அவிழ்ந்து தொங்கியது. அவள் கண்கள் அருவி போலக் கண்ணீர் சிந்தின. அவள் அழுது புலம்பினாள்.

காவலர்கள் அவளைத் தடுத்து நிறுத்தினார்கள்.

"அவளுக்கு வழிவிடுங்கள்!" என்று மன்னன் கட்டளையிட்டான்.

காவலர்கள் வழிவிட, அந்தப் பெண் அழுதுகொண்டே அரசன்முன் ஓடிவந்து நின்றாள்.

இளவரசி எழினி எழுந்தாள். "பெண்ணே! அழாதே!" என்று ஆறுதல் கூறினாள். "அன்பில் சிறந்த நம் மன்னர் இருக்கிறார். உனக்கு என்ன குறை? அழாமல் கூறு. மன்னர் உன் குறையைத் தீர்த்து வைப்பார்" என்றும் இளவரசி சொன்னாள்.

"இந்தக் கொடுமையை எப்படிச் சொல்லுவேன்!" என்று

அந்தப் பெண் அழுதாள்.

"அப்படி உனக்கு என்ன துயரம்?" என்று மன்னர் கேட்டார்.

"நேற்று இரவு காட்டுக்குள் இருந்து ஒரு புலி ஊருக்குள் புகுந்துவிட்டது. என் குழந்தையைத் தூக்கிப் போய்விட்டது. அழகான ஆண் குழந்தை, அது" என்று பெண் அழுதுகொண்டே கூறினாள்.

அதைக் கேட்டு அவையினர் அத்தனை பேரும் அதிர்ச்சி அடைந்தார்கள்!

"அந்தப் புலி இன்னும் மலைஅடிவாரத்தில்தான் பதுங்கி இருக்கிறது. அந்தப் பக்கம் போகவே மக்கள் பயப்படுகிறார்கள்" என்று அந்தப் பெண் தெரிவித்தாள்.

"தாயே! உன் துயரம் மிகப் பெரியது. அதைத் தீர்ப்பது அரிது. என்றாலும் என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன். உனக்கு நிலம் தருகிறேன். அதில் தென்னைகள் பயிர் செய். பெற்றபிள்ளை இல்லாவிட்டாலும், வைத்தபிள்ளை காப்பாற்றும்" என்று மன்னன் கூறினான்.

"தளபதி! இப்பொழுதே போய், அந்தப் புலியை வேட்டையாடிவிட்டு வாரும்!" என்றும் மன்னன் கட்டளையிட்டான்.

உடனே இளவரசி எழுந்தாள். "அப்பா! அந்த வேலையை எனக்குக் கொடுங்கள்" என்று கேட்டாள்.

"நீயா! நீயா புலி வேட்டைக்குப் போகப் போகிறாய்!" என்று மன்னன் ஆச்சரியப்பட்டான்.

"தந்தையே! எனக்கு வேட்டையாடப் பயிற்சி அளித்தீர்கள்! நான் சிறந்த முறையில் பயிற்சி பெற்றிருக்கிறேனா என்று பார்க்க இது ஒரு வாய்ப்பு" என்று இளவரசி சொன்னாள்.

"ஆனாலும், நீ ஒரு பெண்" என்றான், மன்னன்.

"ஆண்களைவிட வீரத்தில் சிறந்தவளாக என்னை வளர்த்திருக்கிறீர்கள்" என்றாள், இளவரசி. "என் வீரத்தைக் காட்ட வாய்ப்புக் கொடுங்கள்" என்றும் வேண்டினாள்.

"இளவரசியின் வீரம் நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டாமா? அனுமதியுங்கள், மன்னா" என்று அமைச்சரும் கூறினார்.

"சரி! புறப்படு மகளே!" என்று மன்னன் மகிழ்ச்சியுடன் அனுமதி அளித்தான்.

இளவரசி மிகவும் மகிழ்ந்தாள். வீரர்களை அழைத்துக்கொண்டு, உடனே புலி வேட்டைக்குப் புறப்பட்டாள்!

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

கிளியை மிரட்டியவனுக்கு அபராதம்!

கிளியை அச்சுறுத்திய கொள்ளையனுக்கு கோர்ட்டில் அபராதம் விதித்த புதுமை சம்பவம் சுவீடனில் நடந்து உள்ளது.

சுவீடனில் உள்ள தெற்கு பகுதியில் அர்போகா என்ற நகரம் உள்ளது. இங்கு ஒருவர் தனது வீட்டில் கிளி வளர்த்து வந்தார். திடீரென்று இந்த வீட்டுக்குள் ஒரு கொள்ளையன் புகுந்தான். வீட்டினுள் இருந்த கிளி திருடனை பார்த்து குரல் எழுப்பியது. உடனே திருடன் கிளியை விரட்டிவிட்டு வீட்டில் உள்ள பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுவிட்டான்.

கொள்ளை நடந்த சம்பவத்தை நேரில் பார்த்த கிளி அதிர்ச்சியடைந்துவிட்டது. அதிலிருந்து கிளி தனியாக வீட்டில் இருப்பது இல்லை. பயந்து நடுங்க ஆரம்பித்துவிட்டது. இதனால் கிளியின் உரிமையாளர் வெளியே செல்லும் போது அதை உறவினர் வீட்டில் விட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில் பிடிபட்ட அந்த கொள்ளையன் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அப்போது கிளியை மிரட்டியது பற்றியும் விவாதிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி கிளிக்கு அதிர்ச்சி உண்டாக்கிய கொள்ளையனுக்கு ரூ. 12 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு கூறினார்.



கொலைகாரக் குள்ளன்

இரண்டடி உயரமுள்ள குள்ளன் ஒருவன்
மாயாவியை எதிர்க்கிறான்.

விறுவிறுப்பான படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

ஏப்ரல் 16-ந்தேதி வெளிவருகிறது!

"ராணிகாமிக்ஸ்", சென்னை-600 007.

வழியைக் கண்டுபிடியுங்கள்!

ராமுவுக்கு மலை மீது ஏற ஆசை. ஆனால் மேலே செல்ல அவனுக்கு வழி தெரியவில்லை. நீங்களாவது வழியை கண்டு பிடித்து அவனை மலை மேலே அழைத்துச் செல்லுங்களேன்!



RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

235

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

everest/93/PP/217-tm